# உங்களுடைய பிள்ளையின் பாடசாலையில் நிகழும் இனவெறி மற்றும் பாகுபாட்டினைப் பற்றி புகார் செய்வது எப்படி



Tamil

**பாடசாலை சமூகங்களில் மரியாதையுடன் நடத்தப்படுவதற்கும், மதிக்கப்படுவதற்கும், சமமாக நடத்தப்படுவதற்குமான தகைமை உங்களுடைய பிள்ளைக்கு இருக்கிறது.**

**மதம் அல்லது இனத்தின் அடிப்படையிலான பாகுபாடு அல்லது துஷ்ப்பிரயோகம் சகித்துக்கொள்ளப்படுவதில்லை.**

தமது பாடசாலையில் மதரீதியான அல்லது இனரீதியான பாகுபாடு அல்லது துஷ்ப்பிரயோகத்திற்கு ஆளான, அல்லது அப்படிப்பட்ட நிகழ்வைக் கண்ணுற்ற பிள்ளை ஒருவருடைய பெற்றோராகவோ, பாதுகாவலாராகவோ நீங்கள் இருந்தால், அதைப் பற்றிப் புகார் செய்யுமாறு உங்களை நாங்கள் ஊக்குவிக்கிறோம்.

தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுவதையும், ஆதரவுதவி வழங்கப்படுவதையும் உறுதிப்படுத்த பாடசாலை ஊழியர்களால் இயலும்.

பாடசாலைக்கு அல்லது பிராந்திய அலுவலகத்திற்கு சம்பிரதாயப்படியான முறைப்பாடு ஒன்றை ஏற்படுத்தும் தெரிவினை நீங்கள் மேற்கொள்ளலாம்.

மேலதிகத் தகவல்களுக்கு 'உங்களுடைய பாடசாலையைப் பற்றிய: 'புகார் அல்லது கரிசனம் ஒன்றை எழுப்புங்கள்' (education.vic.gov.au) எனும் வலைத்தலப் பக்கத்தினைப் பாருங்கள்.

## இப்படிப்பட்ட நிகழ்வு ஒன்றை 'இனவெறிப் புகார் - அவசரத் தொலைபேசி இணைப்பு' (REPORT RACISM HOTLINE) மூலமாக அறிவியுங்கள்

**Report Racism Hotline**

1800 722 476

report.racism@education.vic.gov.au

பொது விடுமுறை நாட்களைத் தவிர, திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9 மணியில் இருந்து மாலை 5 மணி வரை இந்த அவசர உதவி இணைப்பு இயக்கத்தில் இருக்கும்.

இப்படிப்பட்ட நிகழ்வு ஒன்றை உங்களுடைய பிள்ளையின் பாடசாலைக்கு அறிவிப்பது உங்களுக்கு சங்கடமாக இருந்தாலோ, பாடசாலையின் மறுமொழியில் உங்களுக்குத் திருப்தி இல்லை என்றாலோ 'திணைக்கள'த்தின் Report Racism Hotline - உடன் நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

இந்த அவசர உதவி இணைப்பினை நீங்கள் அழைக்கும் பொழுது உங்களால் பின்வருவனவற்றைச் செய்ய இயலும்:

- முறைப்பாடு ஒன்றைச் செய்வது குறித்து கலந்துபேச
- உங்களுக்குக் கிடைக்கும் தெரிவுகளையும், அடுத்ததாக நீங்கள் என்ன செய்யலாம் என்பதையும் கருத்தில்கொள்ள
- பிராந்திய அதிகாரிகளுடனும், ஆதரவுதவி சேவைகளுடனும் தொடர்புகொள்வதில் உதவி பெற.

## PARENTLINE மூலமாக தொலைபேசி-வழி அறிவுரையாலோசனை மற்றும் ஆதரவுதவியினைப் பெறுங்கள்

**Parentline**

13 22 89

www.parentline.vic.gov.au

பொது விடுமுறை நாட்கள் உள்ளடங்க, காலை 8 மணி முதல் நள்ளிரவு வரை, வாரம் ஏழு நாட்களும் Parentline இயக்கத்தில் இருக்கும்.

'திணைக்கள'த்திடமிருந்து அப்பாற்பட்ட, சுயாதீனமான தகுதிபெற்ற அறிவுரையாலோசகர் ஒருவரிடமிருந்து அறிவுரையாலோசனை மற்றும் ஆதரவுதவியை நாடுவதற்காகவும் நீங்கள் Parentline - உடன் தொடர்புகொள்ளலாம்.

Parentline என்பது, பிறப்பில் இருந்து 18 வயது வரையுள்ள பிள்ளைகளின் பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான இரகசிய மற்றும் அநாமதேயத் தொலைபேசி-வழி அறிவுரையாலோசனை சேவையாகும்.

பாடசாலையில் நிகழும் பாகுபாடு அல்லது துஷ்ப்பிரயோகம் ஆகியவற்றை உள்ளடக்கிய பிள்ளை-வளர்ப்புப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்காக அறிவுரையாலோசகர்கள் கிடைப்பார்கள்.

## உபயோககரகமான தகவல்கள்

பாடசாலையில் நிகழும் இனப் பாகுபாடு அல்லது துஷ்ப்பிரயோகம் ஆகியவற்றைப் பற்றி முறைப்பாடு செய்வதைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு 'பாடசாலையில் இடம்பெறும் இன அல்லது மதப் பாகுபாடு குறித்துப் புகார் செய்யுங்கள்' (education.vic.gov.au) எனும் வலைத்தலப் பக்கத்தினைப் பாருங்கள்.

இனவெறித் தனமான தொல்லையளிப்பை உள்ளடக்கும் தொல்லையளிப்புகளுக்கு எதிரான பதில் நடவடிக்கைகளைப் பற்றிய தகவல்கள் மற்றும் மூலவளங்களுக்கு 'தொல்லையளிப்புத் தடுப்பு நடவடிக்கைகள்' (education.vic.gov.au) எனும் வலைத்தலப் பக்கத்தினைப் பாருங்கள்.

## 'தேசிய மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவை' (TIS)

Interpreter

மொழிபெயர்த்துரைப்பு சேவைகள் தேவைப்படும் பெற்றோர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் 13 14 50 எனும் இலக்கத்தில் 'தேசிய மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவை' (TIS)-யை அழைத்து 'திணைக்கள'த்துடன் அல்லது Parentline -உடன் தொடர்புகொள்ளலாம்.